செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

பயிலரங்கத் தொடர் எண்ணிக்கை - 132 நாள்: 23.07.2026

சுவடியியல் புலம்
நடத்தும்

# தமிழ்ச் செவ்வியல் மரபில் நடுகற்கள்
## (HERO STONES IN THE TAMIL CLASSICAL TRADITION)

பயிலரங்கம் - 13

(07.08.2026 – 13.08.2026)

## அறிவிப்பும் அழைப்பும்

இன்றைய உலகில் நடுகற்கள் பற்றிய ஆராய்ச்சிகள் மிகுந்து வருகின்றன. தொன்மைக் காலத்திலேயே தமிழர்களிடமும் நடுகற்கள் பற்றிய சிந்தனை மேலோங்கி இருந்தது. தமிழ்நாட்டில் சேர, சோழ, பாண்டியர் காலத்திலும் எடுக்கப்பட்டுள்ள நடுகற்கள் வரலாற்றில் பதிவாகியுள்ளன. தமிழகத்தில் நடைபெற்ற நடுகல் ஆய்வுகளில் சங்க இலக்கியம், தமிழ் இலக்கணம் ஆகியவற்றுடன் நடுகல் கல்வெட்டுக்களையும் இணைத்துப் பார்க்கும் போக்கு பரவலாக இருந்தது. ஆகமக் கோட்பாடுகளையும் நடுகல் வழிபாட்டில் இணைத்து ஒரு சில ஆய்வுகள் எழுந்தன.

தமிழகத்தில் நடுகல் பற்றிய ஆய்வுகள் 1970களில் தொடங்கித் தமிழ் வீரயுகம் பற்றிய ஆய்வுகளும், மறு ஆய்வுகளும் நடைபெற்று வருகின்றன. இத்தகைய நடுகற்கள் தமிழ் செவ்விலக்கிய மரபிலும், கல்வெட்டியியலிலும், வரலாற்றியலிலும் சிறப்பான இடம்பெற்று விளங்குகின்றன.

மேற்கண்ட தமிழர் மரபு நடுகற்களை அடிப்படையாகக் கொண்டு, நடுகல் ஒப்பாய்வில் பண்டையத் தமிழகமும் பிற நாடுகளும், நடுகல் கல்வெட்டும் தமிழ் இலக்கிய மரபும், நடுகல் கல்வெட்டு மொழியும் செவ்வியல் தன்மையும், நடுகல்லும் வேளாட்சியும், நடுகல்லும் முல்லைத்திணைச் சமூகப் பொருளியல் மாற்றங்களும்

போன்ற பல்வேறு பொருண்மைகளின் அடிப்படையில் இப்பயிலரங்கம் நடைபெற உள்ளது.

இப்பயிலரங்கில் தமிழ் மொழியியல் அறிவும் வரலாற்றியல் தெளிவும் கல்வெட்டியல் புலமையும் ஒருங்கே பெற்ற அறிஞர் பெருமக்கள் பயிற்றுவிக்க உள்ளனர். தமிழியல், வரலாற்றியல், கல்வெட்டியல் ஆகிய துறைகளில் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொள்ளும் மாணவர்கள் மட்டும் இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயனடையுமாறு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அன்புடன் அழைக்கிறது.

**பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:**

- பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை - 40
- பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: 07.08.2026 முதல் 13.08.2026 வரை ஏழு நாட்கள்.
- பயிலரங்கு நேரம்: காலை 10.00 - 1.00 & மாலை 2.00 - 5.00.
- பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
- பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
- பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும் தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
- பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.
- இணையவழி விண்ணப்பத்தை https://forms.gle/nNn2fdUMkNio37pg8 என்ற இணைப்பின் வழியாகவோ அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு (QR-code) மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

- நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் 03.08.2026 (மாலை 05.00 மணி). காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.
- செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 04.08.2026 அன்று மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
- இப்பயிலரங்கில் பங்கேற்போர் 28 அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதம் மற்றும் இடைநிற்றல் இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.
- பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**